# INISIATIF PEDULI RAKYAT (IPR)
# SKIM AIR DARUL EHSAN
# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**1** ***Skim Air Darul Ehsan* என்பது என்ன?**

*Skim Air Darul Ehsan* என்பது சிலாங்கூர் வாழ் மக்களில் இலக்கு குழுவிற்கான இலவச குடிநீர் மறு பகிர்வு அளிக்கும் திட்டமாகும்.

**2** ***இந்த Skim Air Darul Ehsan பெறுவதற்கு யார் தகுதியானவர்கள்?***

கீழே கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டுள்ள வாடிக்கையாளர்கள் இந்த *Skim Air Darul Ehsan* -க்கு தகுதியானவர்கள்.

i. விண்ணப்பதாரர்கள் அல்லது அவரின் துணை மலேசிய குடியுரிமை பெற்று சிலாங்கூர் மாநிலத்தில் வசிக்க வேண்டும்
ii. குடும்ப மாத வருமானம் (கணவன் மற்றும் மனைவி அல்லது ஒருவர் மற்றும் மணமாகாதவர்/துணையில்லாதவர்) RM4,000 கீழ் இருத்தல்.
iii. தனி குடிநீர் மீட்டர் கொண்ட குடியிருப்பு
v. விண்ணப்பதாரர்கள் ஒரு கணக்கு/குடியிருப்பிற்கே விண்ணப்பம் செய்ய முடியும்.

***குறிப்பு:***

31 டிசம்பர் 2021 வரை மலிவு விலை அடுக்குமாடி குடியிருப்பு வாசிகள் இந்த *Skim Air Darul Ehsan* வழி 20 கன மீட்டர் இலவச குடிநீரை பெறுவர். இது கூட்டு மேலாண்மை நிறுவனம் (JMB) அல்லது மேலாண்மைக் கழகம் (MC) மற்றும் *Lembaga Perumahan Hartanah Selangor (LPHS)* பொறுத்தது. இருப்பினும், SPAN குறிப்பிட்டிருப்பது போல் 2021-க்குள் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் நுழைவு சமூகமும் மொத்த மீட்டர்களை தனி மீட்டருக்கு மாற்றுவது அவசியமாகும்.

**3** ***இதற்கு முன்பு நான் ஒவ்வொரு மாததிற்கும் 20 கன மீட்டர் இலவச குடிநீரைப் பெற்று வந்தது போல் 1 மார்சு 2020-க்கும் பிறகும் பெறுவேனா?***

20 கன மீட்டர் இலவச குடிநீரை பெறும் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து 29 பிப்ரவரி 2020 வரை அதனை பெறுவர். வாடிக்கையாளர்கள் புதிய விண்ணப்பம் செய்ய வேண்டும். தகுதியான விண்ணப்பம், 1 மார்சு 2020-ஐ தொடர்ந்து *Skim Air Darul Ehsan* வழி இலவச குடிநீரை பெறுவர்.

**4** ***RM4,000-க்கும் கீழ் குடும்ப வருமானம் என்பது எதைக் குறிக்கின்றது?***

(கணவன் மற்றும் மனைவி அல்லது அவற்றில் ஒருவர் மற்றும் மணமாகதவர் அல்லது துணையில்லாதவர்) மாத குடும்ப வருமானம் RM4,000 கீழ் இருத்தல்.

**5** ***RM4,000 மேல் வருவாய் கொண்டர் அல்லது அவரின் துணை Skim Air Darul Ehsan பெற விண்ணப்பிக்கலாமா?***

தகுதியானது அல்ல, ஏனெனில் குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு உட்படவில்லை .

**6** ***எங்களுடன் உடன் வசிக்கும் எங்களின் பிள்ளையின் வருமானத்தைச் சேர்த்து எங்களின் மாத வருமானம் RM4,000-க்கும் மேல் உள்ளது. நாங்கள் Skim Air Darul Ehsan-க்கு விண்ணப்பம் செய்ய தகுதியானவர்களா?***

விண்ணப்பங்கள் கணவன் மற்றும் மனைவியின் வருமானத்தையே பொருத்தது. கணவன் மற்றும் மனைவியின் வருமானம் RM4,000 மேல் இருக்கும் பட்சத்தில் *Skim Air Darul Ehsan* -க்கு தகுதியில்லாதவர்களாவர்.

**7** ***எனக்கு நிலையான வருமானம் இல்லை, வருமான சீட்டு இல்லை மற்றும் LHDN-யில் பதிவு செய்து கொள்ளவும் இல்லை, நான் விண்ணப்பம் செய்ய தகுதியானவரா?***

ஆம், விண்ணப்ப விதிமுறைகளுக்கு உட்பட்டு மற்றும் தகுதியை பொருத்து நீங்கள் விண்ணப்பம் செய்ய தகுதியானவர்களாவர்.

**8** ***கணவனை இழந்த மனைவி விண்ணப்பம் செய்ய தகுதியானவரா?***

ஆம், விண்ணப்ப விதிமுறைகளுக்கு உட்பட்டு மற்றும் தகுதியை பொருத்து நீங்கள் விண்ணப்பம் செய்ய தகுதியானவர்களாவர்.

**9** ***நான் புத்ராஜ ஜெயாவில் வசிக்கிறேன், ஆனால் என் வீடு சிலாங்கூரில் உள்ளது, நான் விண்ணப்பம் செய்ய தகுதியானவாரா?***

சிலாங்கூரில் உள்ள குடியிருப்பு கணகிற்கு விதிமுறைகளுக்கு உட்பட்டு மற்றும் தகுதியை பொருத்து நீங்கள் விண்ணப்பம் செய்ய முடியும்.

**10** ***இந்த Skim Air Darul Ehsan -ஐ கோலாலம்பூர் மற்றும் புத்ராஜ ஜெயாவில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்க தகுதியானவர்களா?***

இல்லை, இது சிலாங்கூர் மாநிலத்தில் வசிப்பவர்களுக்கானது மட்டுமே.

**11** ***வாடகைக்கு இருப்பவர் இந்த Skim Air Darul Ehsan-க்கு விண்ணப்பிக்க தகுதியானவர்களா?***

ஆம், சிலாங்கூரில் மாநிலத்தில் வாடகை குடியிருப்பில் இருந்து விண்ணப்ப விதிமுறைகளுக்களுக்கு உட்பட்டவர் விண்ணபிக்க தகுதியானவர்களாவர்.

**12** ***என் வீட்டை வாடகைக்கு கொடுத்து விட்டேன். என்னுடைய பெயரில் கணக்கு பதிவு செய்யப்பட்டிருக்கும் போது வாடகைக்கு இருப்பவர் விண்ணப்பிக்கலாமா?***

முடியும், வாடகைக்கு இருப்பவர் தகுதியாகவும் விண்ணப்ப விதிமுறைகளுக்கு உட்பட்டு இருந்தால் விண்ணப்பிக்கலாம்.

**13** ***வருமானம் இல்லாத மாணவர்கள் ஆகிய நாங்கள் ஒரே வீட்டில் நிறைய பேர் வசித்து வருகிறோம். நாங்கள் விண்ணப்பம் செய்ய தகுதியானவர்களா?***

ஆம். விண்ணப்ப விதிமுறைகளுக்கு மற்றும் சிலாங்கூர் மாநில அரசின் சரிபார்ப்பிற்கு உட்பட்டு நீங்கள் விண்ணப்பம் செய்யலாம்.

**14** ***எனக்கு 5 வீடுகள் உள்ளது மற்றும் நான் தகுதியானவர். ஆகவே அனைத்து வீடுகளுக்கும் Skim Air Darul Ehsan கிடைக்குமா?***

ஒரே குடியிருப்பு/கணக்கு மட்டுமே விண்ணப்பம் செய்ய முடியும்.

**15** ***நான் இடமாற்றம் செய்தால், Skim Air Darul Ehsan-ஐ பெற முடியுமா?***

ஆம். நீங்கள் இன்னமும் சிலாங்கூர் மாநிலத்தில் வசித்தால் விண்ணப்பம் செய்ய முடியும்.

**16** ***மலிவு விலை அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் எனக்கு அயிர் சிலாங்கூருடன் கணக்கு இல்லை. எங்களின் கணக்கு JMB உடனானது. நான் தகுதியானவரா மற்றும் எப்படி விண்ணப்பம் செய்வது?***

ஆம். நீங்கள் விண்ணப்பம் செ ய்யலாம் மற்றும் நீங்கள் பதிவு பெற்ற அந்த அடுக்குமாடி குடியிருப்பின் MC/JMB-யை தொடர்பு கொண்டு உறுதிபாடு பெற்று கொள்ள வேண்டும்.

**17** ***Skim Air Darul Ehsan-ற்கு நாங்கள் எப்படி விண்ணப்பிக்கலாம்?***

i. *Skim Air Darul Ehsan* விண்ணப்பத்தினை இயங்கலை வழி *www.ssipr.selangor.gov.my* எனும் அகபக்கதில் விண்ணப்பிக்கலாம்.

ii. இத்திட்டத்தின் விண்ணப்ப பாரம்கீழ் கொடுக்கப்பட்டுள்ள வழிகளின் வழி பதிவிறக்கம் செய்து பெறலாம்:

- *www.airselangor.com*
- பெங்கூருசான் அயிர் சிலாங்கூர் சென் பெர்-யின் *(Air Selangor)* பத்து (10) சேவை அலுவலகங்கள்
- *Pusat Khidmat Masyarakat (PKM)*

iii. பூர்த்தி செய்யப்பட்ட பாரத்தினை மின்னஞ்ல் வழி *iprair@www.airselangor.com*-க்கு அனுப்புதல் அல்லது பெங்கூருசான் அயிர் சிலாங்கூர் சென் பெர்-யின் பத்து (10) சேவை அலுவலகங்களில் சமர்பிக்க வேண்டும்.

***குறிப்பு;***

அரசு நடமாட்ட கட்டுப்பாடு ஆணை காலத்தில் (PKP), இயங்கலை *www.ssipr@gov.my* வழி பதிவு செய்யலாம்.
*www.airselangor.com*-யிலிருந்து விண்ணப்ப பாரத்தினைப் பெற்று பூர்த்தி செய்த விண்ணப் பாரத்தினை *iprair@airselangor.com*-க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

**18** ***எப்போது இந்த Skim Air Darul Ehsan-ற்கு விண்ணப்ப காலம் மீண்டும் தொடங்கப்படும்?***

*Skim Air Darul Ehsan* -ற்கா ன விண்ணப்ப காலம் 1 ஏப்ரல் 2020 மீண்டும் தொடங்கப்படும்.

**19** ***எப்போது இந்த Skim Air Darul Ehsan இரண்டாம் கட்டம் அமல்படுத்தப்படும்?***

*Skim Air Darul Ehsan* இரண்டாம் கட்ட செயல்பாடு 1 செப்டம்பர் 2020 தொடங்கப்படும்.

**20** ***நான் Skim Air Darul Ehsan-க்கு பதிவு செய்த பிறகு, என்னுடைய விண்ணப்பம் பரிசீலனைக்குப் பிறகு 20 கன மீட்டர் இலவச குடிநீருக்கான முடிவு எனக்கு எப்போது அறிவிக்கப்படும்?***

| Skim Air Darul Ehsan (SADE) இரண்டாம் கட்ட செயல்பாட்டு அட்டவணை (1,2 & 3-ஆம் தரவரிசை) | | | |
|---|---|---|---|
| **தரவரிசை** | **திகதி** | **காலம்** | **நடவடிக்கை** |
| 1 | 1 ஏப்ரல் 2020 - 30 ஜூன் 2020 | 3 மாதம் | விண்ணப்பம் தொடங்கப்படுகின்றது |
| | 1 ஜூலை 2020- 31 அகஸ்டு 2020 | 2 மாதம் | விண்ணப்பங்களின் செயலாக்கம் மற்றும் குறுக்கு சோதணை |
| | 1 செப்டம்பர் 2020 | | *Skim Air Darul Ehsan* முதலாம் கட்டத்தில் வெற்றி பெற்ற விண்ணப்பங்கள் அமலாக்க திகதி |
| 2 | 1 ஜூலை 2020 - 31 டிசம்பர் 2020 | 6 மாதம் | விண்ணப்பம் தொடங்கப்படுகின்றது |
| | 1 ஜனவரி 2021- 28 பிப்ரவரி 2021 | 2 மாதம் | விண்ணப்பங்களின் செயலாக்கம் மற்றும் குறுக்கு சோதணை |
| | 1 மார்சு 2021 | | *Skim Air Darul Ehsan* இரண்டாம் கட்டத்தில் வெற்றி பெற்ற விண்ணப்பங்கள் அமலாக்க திகதி |
| 3 | 1 ஜனவரி 2021 - 30 ஜூன் 2021 | 6 மாதம் | விண்ணப்பம் தொடங்கப்படுகின்றது |
| | 1 ஜூன் 2021 - 31 ஆகஸ்டு 2021 | 2 மாதம் | விண்ணப்பங்களின் செயலாக்கம் மற்றும் குறுக்கு சோதணை |
| | 1 செப்டம்பர் 2021 | | *Skim Air Darul Ehsan* மூன்றாம் கட்டத்தில் வெற்றி பெற்ற விண்ணப்பங்கள் அமலாக்க திகதி |

**21** ***விண்ணப்பத்திற்காக கொடுக்கப்பட்ட காலம் முடிவடைந்த பின்பு, நான் விண்ணப்பம் செய்ய முடியுமா?***

சிலாங்கூர் மாநில அரசாங்கத்தின் அறிவிப்பினை பொறுத்த நாளில் மீண்டும் திறக்கப்படும் போது விண்ணப்பம் செய்யலாம்.

**22** ***நான் Skim Air Darul Ehsan-க்கு விண்ணப்பம் செய்து விட்டேன், ஆனால் வெற்றி பெற வில்லை. நான் மேல் முறையீடு செய்யலாமா அல்லது புதிய விண்ணப்பம் செய்ய முடியுமா?***

முடியும். தாங்கள் 1 ஏப்ரல் 2020 தொடங்கும் *Skim Air Darul Ehsan*-க்கு விண்ணப்பிக்கலாம் *Skim Air Darul Ehsan* விதிமுறைகளுக்கு மற்றும் சிலாங்கூர் மாநில அரசாங்கத்தின் மதிப்பாய்வைப் பொறுத்தது.

***மேல் விவரங்களுக்கு www.airselangor.com வலம் வாருங்கள் அல்லது 15300-க்கு தொடர்பு கொள்ளவும்.***